ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2157/36 - 2020 ජනවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.09
*2157/36 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 44(5) ஆம் நியதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் புகையிரத சேவைகள் இராஜாங்க அமைச்சருக்காக விடயங்கள் மற்றும் கடமைப் பொறுப்புக்களைக் கையளித்தல், போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சராகிய எனது மேற்பார்வைக்கு, நிர்வாகத்திற்கு மற்றும் வழிகாட்டலின் கீழ் இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணை* I *மற்றும்* II *இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உடனடியாகச் செயல்பட வேண்டுமென அரசியலமைப்புச் சட்டத்தின் 44(5) ஆம் நியதிச் சட்டத்தின் பிரகாரம் என்னால் இத்துடன் அறியத்தருகின்றேன்.*

மஹிந்த அமரவீர,
போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சர்.

*2020, சனவரி 08.*

1A - G 31784 — 392 (2020/01)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை - I

**மாண்புமிகு திலும் அமுனுகம அவர்கள் - போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்**

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* | *III ஆம் நிரல்* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *I ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள கடமைகளும் பணிகளும் நிறைவேற்றுவதற்காக உரித்துபெறும் திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
| 1. பயணிகளுக்கு படகுத்துறைச் சேவைகளை வழங்கல் | 1. இலங்கை போக்குவரத்துச் சபை | • இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டம் (2005, இலக்கம் 27) |
| 2. பாதுகாப்பான, வினைத்திறன்மிக்க மற்றும் நம்பகத்தகுந்ததுமான பொதுப் பயணிகள் போக்கு வரத்துச் சேவைகளை வழங்குதல் | | |
| 3. சூழல் நேயமிக்க போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் | | |
| 4. பசுமைக்குடில் வாயு உமிழ்வினைக் குறைப்பதற்காக போக்குவரத்துத் துறை பங்களிக்கக்கூடிய வகையில் உபாய முறையிலான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |

## அட்டவணை - II

**மாண்புமிகு சீ. பி. ரத்நாயக்க அவர்கள் - புகையிரத சேவைகள் இராஜாங்க அமைச்சர்**

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* | *III ஆம் நிரல்* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *I ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள கடமைகளும் பணிகளும் நிறைவேற்றுவதற்காக உரித்துபெறும் திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களும்* |
| 1. புதிய தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி ஒன்றிணைந்த பயணிகள், பண்டப் புகையிரதப் போக்கு வரத்துச் சேவைகளை வினைத் திறமையாக நடாத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் புகையிரத உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தியும் தரம் வாய்ந்த புகையிரதச் சேவைகளை வழங்கலும் | 1. இலங்கை புகையிரதத் திணைக்களம் | • புகையிரதச் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கம்) |

**அட்டவணை** - II *(தொடர்ச்சி)*

**மாண்புமிகு சீ. பி. ரத்நாயக்க அவர்கள் - புகையிரத சேவைகள் இராஜாங்க அமைச்சர்**

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* | *III ஆம் நிரல்* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *I ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள கடமைகளும் பணிகளும் நிறைவேற்றுவதற்காக உரித்துபெறும் திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
| *2. புதிய புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல், இருக்கின்ற புகையிரதப் பாதைகளை விரிவாக்குதலும் அதற்குரிய காணிகளை கையகப்படுத்துதலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும்* | | |

*01-599*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.